# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2027/40 - 2017 ජූලි මස 14 වැනි සිකුරාදා - 2017.07.14

*2027/40 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வட மாகாண மாகாண சபை

*2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வடக்கு மாகாண சுகாதார சேவைகள் (திருத்த) நியதிச் சட்டம்*

***2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வடக்கு மாகாண சுகாதார சேவைகள் நியதிச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு நியதிச்சட்டம்***

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடக்கு மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக

1. இந்நியதிச் சட்டம் வடக்கு மாகாணத்தின் 2016ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சுகாதார சேவைகள் (திருத்த) நியதிச் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் வடக்கு மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்ற திகதி தொடக்கம் நடைமுறைக்கு வருதல் வேண்டும். — சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்

2. 2015 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வடக்கு மாகாண நிதி நியதிச்சட்டத்தின் 8 ஆம் பிரிவானது நீக்கப்பட்டு புதிய உட்பிரிவினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. — முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்

“மாகாணப் பணிப்பாளர் பொதுச் சுகாதாரம் தொடர்பான கருமங்களில் இந் நியதிச் சட்டத்தினால், தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைப் பிரயோகிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் புரிவதிலும் அவ் இடப்பரப்பிற்குள்ளிருக்கும் உள்ளூராட்சி அதிகார சபைத் தலைவர்/ஆணையாளர்/செயலாளர் ஆகியோரின் கலந்தாலோசனையுடன் செயலாற்றுதல் வேண்டுமென்பதுடன் உள்ளூராட்சி அதிகார சபைத் தலைவர்/ஆணையாளர்/செயலாளர் ஆகியோர் மாகாணப் பணிப்பாளருக்கு வேண்டப்படும் தகவல்களை கொடுத்து உதவுதலும் வேண்டும்”.

3. இந் நியதிச் சட்டத்தின் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். — ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் தமிழ் உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்

7-981/1

1A - PG 3610 — 27 (2017/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**வடக்கு மாகாண மாகாண சபை**

*2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வடக்கு மாகாண சுகாதார சேவைகள் (திருத்த) நியதிச்சட்டம்*

வடக்கு மாகாண, மாகாண சபையால் 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 12 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க வடக்கு மாகாண சுகாதார சேவைகள் (திருத்த) நியதிச்சட்டத்திற்கு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களால் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

க.தெய்வேந்திரம்,
செயலாளர்,
பேரவைச் செயலகம்,
வடக்கு மாகாண சபை.

பேரவைச் செயலகம்,
ஏ 9, வீதி,
கைதடி,
2017, யூலை 12.

7 - 981/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.